that the statement made by the Hon. the Minister is at variance with facts and that no Government agency had asked the College authorities to submit itself to such an audit and the delay in the release of the funds is the entire fault of the Government.

"Hence, I request you to refer this matter to the Privilege Committee to enable the House to get the correct facts."

என்று உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி உரிமைப் பிரச்சினையாகும் என்பதை மட்டும் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். நான் நேற்று ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பியிருந்தேன். இன்றைக்குச் சொல்கிறேன் என்று சொல்லியிருந்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முடியட்டும், பிறகு நீங்கள் சொல்லலாம். நான் பிறகு சொல்கிறேன் என்று சொன்னேன்.

(2) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) உறுப்பினர்களுக்காக உறுப்பினர் விடுதியில் இருந்து விடப் படும் தனிப்பேருந்துகளில் பொதுமக்கள் அனுமதிக்கப்படாதது குறித்து.

திரு. ஆ. பரந்தாமன்: பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். நாங்களெல்லாம் எம்.எல்.ஏ. ஹாஸ்டலிலேயிருந்து தினந்தோறும் சட்டமன்றத்திற்கு வந்துகொண்டிருக்கிறோம். எங்களுக்கு வசதி செய்து தரும் வகையில் அரசாங்க பஸ்களை விட்டிருக்கிறார்கள். ஆனால் ஒன்றிரண்டு நாட்களுக்கு முன்பு யாரோ ஒரு உறுப்பினர் இந்தப் பிரச்சினையை எழுப்பினார்கள். நாங்கள் ஏறும் நேரத்தில் அதிகமான பொதுமக்கள் அதில் ஏறிவிடுகிறார்கள், அதனால் எங்களுக்கு வசதியில்லை என்று சொன்னவுடன் இப்பொழுது பொதுமக்கள் அதில் ஏறுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. அதனால் அரசாங்க விடுதிகளில் நாங்கள் வரும் நேரத்தில் அங்கே வருகிற பொதுமக்கள் எங்களைச் சூழ்ந்துகொண்டு கலவரத்தை உருவாக்கும் சூழ்நிலையை ஏற்படுத்துகிறார்கள். ஆகவே, 8 மணியிலிருந்து 9 மணி வரையிலும், பிற்பகல் 1 மணி முதல் 2 மணி வரையிலும் மட்டும் எம்.எல்.ஏ.-க்களுக்கு

மட்டும் அந்த வசதியை ஏற்படுத்திவிட்டு, மற்ற நேரங்களில் பொது மக்களும் ஏறலாம் என்ற வசதியைச் செய்து தருவதற்கு நீங்கள் யோசனை செய்தால் நல்லது என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "ஸ்டேட் லெஜிஸ்லேச்சர்" பற்றிய டிமாண்ட் வரும்பொழுது அந்தக் குறைபாடுகளைக் கூறுங்கள். அப்பொழுது முடிவெடுக்கலாம்.

3. உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி.

தன் கவன ஈர்ப்பு அறிவிக்கைக்கு கல்வி அமைச்சர் தவறான தகவல் அளித்ததாக டாக்டர் எச். வி. ஹாண்டே எழுப்பிய உரிமைப் பிரச்சினை

DR. H. V. HANDE: Mr. Speaker, I beg your permission to bring to the notice of the Minister for Education the contents of my Privilege Notice so that the House will be able to know the correct position. He had made a statement in reply to my call attention notice which I raised here about the S.I.E.T. College students. It was stated that the S.I.E.T. College was at fault, that the Education Department had sought certain details from the College and the Education Department wanted to subject the accounts of the College to departmental audit, etc. That was the information given by the Hon. Minister in this House.

The Minister also stated that the III Term funds for the college were not granted because the college authorities refused to submit to audit.

But in the Hindu, dated 30th March 1974, there was a news item by means of a statement by the Correspondent of the College that the statement made by the Minister was at variance with facts, that no Government agency asked the College authorities to submit itself to such an audit and the delay in the release of the funds was entirely the fault of the Government.

Besides, they had also stated that as early as 29th February 1974 in the proforma prescribed, there was a request by the management of the Women's S.I.E.T. College. But there was no